# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 325 | 4 Pages | 27.6.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 325 | 4 பக்கங்கள் | 27.6.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் இனி மற்றவர்களுக்கும் இடிக்கெட் எடுக்கலாம்: ரெயில்வே அமைச்சகம் விளக்கம்



புதுடெல்லி, ஜூன் 27

ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் கணக்கு வைத்துள்ள தனிநபர்கள், வெவ்வேறு குடும்ப பெயர்களுடன் கூடிய மற்றவர்களுக்கு தங்கள் கணக்கில் ரெயில்வே இடிக்கெட் எடுக்க முடியாது என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், அவற்றுக்கு ரெயில்வே அமைச்சகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரெயில்வே அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறுகையில், "ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளத்தில் கணக்கு வைத்துள்ளவர்கள், மற்றவர்களுக்கும் தங்கள் கணக்கில் இடிக்கெட் எடுக்கலாம். இதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது. ஒருவர் தனது பயனாளர் ஐ.டி.யை பயன்படுத்தி, தன்னுடைய நண்பர்கள், குடும்பத்தினர், உறவினர்கள் என யாருக்கு வேண்டுமானாலும் இடிக்கெட் எடுக்கலாம்.

ஒருவரின் கணக்கில் இருந்து மாதத்துக்கு 12 இடிக்கெட் வரை பதிவு செய்யலாம். கணக்குவைத்திருப்பவர் ஆதார் மூலம் உறுதி செய்யப்பட்டவராக இருந்தால், மாதத்துக்கு 24 இடிக்கெட் வரை எடுக்கலாம். ஆனால், ஒவ்வொரு டிக்கெட்டிலும் ஒரு பயணியாவது ஆதார் மூலம் உறுதி செய்யப்பட்டவராக இருக்க வேண்டும். அதே சமயத்தில், இந்த டிக்கெட்டுகளை வணிகரீதியாக விற்கக்கூடாது. அப்படி செய்வது ரெயில்வே சட்டப்படி குற்றச்செயல் ஆகும்" என்று அவர் கூறினார்.

## காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் தமிழகத்தின் கோரிக்கை நிராகரிப்பா?

புதுடெல்லி, ஜூன் 27

காவிரி மேலாண்மை ஆணையத்தின் 31வது கூட்டம் ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது. இதில் தமிழ்நாடு உள்பட 4 மாநிலங்களின் அதிகாரிகளும் பங்கேற்றனர். தமிழ்நாட்டில் இருந்து தமிழ்நாடு அரசின் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா உள்ளிட்ட அதிகாரிகளும், கர்நாடகத்தில் இருந்து நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கவுரவ் குப்தா, கேரளாவில் இருந்து நீர்வளத்துறை முதன்மை செயலாளர் அசோக்குமார்சிங், புதுச்சேரியில் இருந்து பொதுப்பணித்துறை செயலாளர் ஜெயந்தகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் 4 மாநில நீரியல் புள்ளி விவர சேகரிப்புக்கு பிறகு தமிழ்நாட்டு அதிகாரிகள் தமிழகத்துக்கு உரிய தண்ணீரை வலியுறுத்தி பேசினர். "ஜூன் 24 ந்தேதி நிலவரப்படி 12.490 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே மேட்டூர் அணையில் இருப்பு உள்ளது. இதில் 2 டி.எம்.சி. மட்டுமே பயன்படுத்த முடியும். குடிநீர் மற்றும் சுற்றுச்சூழல் தேவைக்காக ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. எனவே, 12ந்தேதியன்று பாசனத்துக்காக தண்ணீர் திறக்க முடியவில்லை.

சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின்படி நிர்ணயிக்கப்பட்ட நீரை ஜூன் மாதத்தில் கர்நாடகம் வழங்கவில்லை. பற்றாக்குறை உள்ளது. எனவே ஜூன் மாத பற்றாக்குறை தண்ணீர் 5.367 டி.எம்.சி. தண்ணீரையும், ஜூலை மாதத்துக்காக 31.24 டி.எம்.சி. தண்ணீரையும் வழங்க கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டது. இதற்கு கர்நாடக அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தனர். தண்ணீர் தரும் சூழ்நிலை இல்லை என வாதிட்டனர். இது சிறிதுநேரம் நீடித்தது.

ஆனால் ஆணைய தலைவரோ தண்ணீர் திறப்பு விஷயத்தில் எந்த உத்தரவையும் கர்நாடகத்துக்கு பிறப்பிக்கவில்லை. உத்தரவு பிறப்பிக்காமேலேயே கூட்டத்தை முடித்துக்கொண்டார். தண்ணீர் திறப்பு பற்றி விரைவில் அறிவிப்பு வெளியாகலாம் என தெரிகிறது.

இதற்கிடையே, காவிரி ஒழுங்காற்றுக்குழு நாளை (வியாழக்கிழமை) கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4 மாதமாக பொருட்கள் வழங்காத ரேஷன்கடை பெண் ஊழியர்... ஆத்திரத்தில் கிராம மக்கள் செய்த சம்பவம்



தும்கா, ஜூன் 27

ஜார்கண்ட் மாநிலம் தும்கா மாவட்டத்தில் உள்ளது மதுபன் கிராமம். இங்குள்ள ரேஷன் கடையில் கடந்த 4 மாதங்களாக ரேஷன் பொருட்கள் சரியாக வழங்கப்படவில்லையாம். இதனால் ஆத்திரம் அடைந்த கிராம மக்கள், ரேஷன் கடையில் வேலை செய்யும் பெண் ஊழியருக்கு செருப்பு மாலை அணிவித்து, கிராமத்தில் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

அவர்கள் கோவிந்தபூர்சாகேப்கஞ்ச் நெடுஞ்சாலையை மறித்து போராட்டம் நடத்தினர். இதனால் சிறிது நேரத்துக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பரபரப்பும் ஏற்பட்டது.

இதையடுத்து மாவட்ட வழங்கல் அதிகாரி மற்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் சம்பவம் குறித்து கேட்டறிந்தனர். மறுநாள் (இன்று) முதல் ரேஷன்பொருள் வினியோகிக்க உறுதி அளித்ததன் பேரில் கிராம மக்கள் கலைந்து சென்றனர்.

# 95 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஜூன் 2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த 3 ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாக 32,774 நபர்களுக்கும் பல்வேறு அரசுத்துறைகளில் நேரடி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளின் வாயிலாக 32,709 நபர்களுக்கும் என மொத்தம் 65,483 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.



அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் குரூப் 1 பணிகளில் 21 துணை ஆட்சியர்கள், 26 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 25 உதவி ஆணையர்கள் (வணிக வரிகள்), 13 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், 7 உதவி இயக்குநர் (ஊரக வளர்ச்சி) மற்றும் 3 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் என மொத்தம் 95 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தலைமை செயலகத்தில், 14 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பணிநியமன ஆணைகளை பெற்றுக் கொண்டவர்கள் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியினை தெரிவித்துக்கொண்டனர். பணிநியமன ஆணைகள் பெற்றுக்கொண்ட பயிற்சி அலுவலர்களுக்கு வரும் 1ம் தேதி முதல் சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் அடிப்படைப் பயிற்சி தொடங்க உள்ளது.

இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் க. நந்தகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## யானை வழித்தடத்தில் ஈஷா யோகா மையம் அமைக்கப்பட்டு உள்ளதா..? அமைச்சர் மதிவேந்தன் அளித்த பதில்

சென்னை, ஜூன் 27

தமிழக சட்டசபையில் நேற்று வனத்துறை மானியக் கோரிக்கை மீது எம்.எல்.ஏ.க்கள் முன்வைத்த விவாதத்திற்கு அந்தத் துறையின் அமைச்சர் மதிவேந்தன் பதிலளித்து பேசியதாவது:

யானை வழித்தடங்கள் என்றால், யானை வாழ்விடங்களை இணைப்பதற்காக யானைகளால் தொடர்ந்து பயன்படுத்தப்படும் தடங்கள் என்று குறிப்பிடலாம். வனப்பகுதிகள் இடைவெளியின்றி தொடர்ச்சியாகக் காணப்பட்ட காலத்தில் யானைகளின் நடமாட்டம், வனத்துக்குள்ளேயே இருந்து வந்தது. மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் கன்னியாகுமரி தொடங்கி கிருஷ்ணகிரி வரை உள்ள வனப்பகுதிகள், இடைவெளி இல்லாத பரந்து விரிந்து இருந்த காலங்களில் யானைகளால் விவசாயிகளுக்கும், குடியிருப்புகளுக்கும் தொந்தரவுகள் இருந்ததே இல்லை. கடந்த 50 ஆண்டுகளில் ஏற்பட்ட விவசாய நிலங்களின் விரிவாக்கம் மற்றும் பல்வேறு கிராம மேம்பாட்டு பணிகள் நடந்த பகுதிகளில் மேற்கு தொடர்ச்சி பாதிப்படைந்துள்ளது. தமிழ்நாட்டின் வனப்பகுதியில் காணப்படும் யானைகளை பாதுகாக்க பல்வேறு முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

யானைகளின் வழித்தடங்களை இணைப்பதன் மூலம் மனிதன் யானை முரண்பாடுகளை பெரிதும் குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னை ஐகோர்ட்டின் அறிவுறுத்தலின் பேரில் யானைகள் வழித்தடங்கள் அடையாளம் காண்பதற்கு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.



யானைகளின் வழித்தடங்களை அறிய முனைவர் ராமன் சுகுமார் தலைமையில் சிறப்பு குழுவின் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு உள்ளது.

யானை நடமாட்டம் உள்ள மாவட்டம் வாரியாக அந்தந்த பகுதிக்கான யானை வழித்தடங்கள் குறித்த விவரங்களை, மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் விளக்கி மக்களின் கருத்துக்கள் தொகுக்கப்படும். அதன் அடிப்படையில் இறுதி அறிக்கை சிறப்பு குழுவால் முடிவு செய்யப்படும்" என்று அவர் பேசினார்.

அப்போது குறுக்கிட்டு, காங்கிரஸ் எம்.எல்.ஏ. அசன் மவுலானா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதில் அவர் பேச சபாநாயகர் அப்பாவு அனுமதி வழங்கினார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு:

அசன் மவுலானா: யானை வழித்தடங்கள் பற்றி அமைச்சர் பேசுகிறார். யானை வழித்தடங்களை அழித்து கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. சாலையை யானைகள் கடக்கும் பகுதிகளில், யானை கடக்கும் பகுதி என்ற பலகைகளை வைப்பதில்லை. கோவையில் ஈஷா யோகா மையத்தை யானை வழித்தடங்களை மறித்து கட்டியுள்ளனர்.

அமைச்சர் மதிவேந்தன்: யானை வழித்தடங்களைப் பற்றிய முழு அறிவு இன்னும் யாருக்கும் இல்லை. இன்னும் பல விஷயங்களை தெரிந்துகொள்ள வேண்டும். இதை தெளிவுபடுத்தும் வகையில் அதுபற்றி நான் பேசுகிறேன். யானை வழித்தடங்கள் எந்த நிலையில் உள்ளன? என்பதை அறிய வேண்டும். அடுத்தகட்டமாக அதுபற்றிய மக்களின் குறைகேட்டு, அதன் பின்னர் தான் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

குழு அமைக்கப்பட்டு மிகத் தீவிரமாக ஆய்வுகள் மேற்கொண்ட பிறகு, மக்கள் குறைகேட்டு அடுத்த கட்ட முடிவுகள் எடுக்கப்படும். எனவே அவசரப்பட்டு எதையும் நான் கூறவில்லை.

அவை முன்னவரான அமைச்சர் துரைமுருகன்: யானை வழித்தடங்கள் பற்றி பத்திரிகைகளில் பல செய்திகள் வருகின்றன. வனப்பகுதிகளில்விடுதிகள் அமைத்துக் கொண்டு யானை போக்குவரத்தை தடுக்கின்றனர் என்பது பற்றி அசன் மவுலானா கேட்கிறார்.

உங்கள் அனுமதியைப் பெற்றுத்தான் ஈஷா யோகா அந்த இடங்களை பிடித்தார்களா? யானை வழித்தடங்களை தடுத்திருக்கிறார்கள் என்பது உண்மையா? காப்புக்காட்டில் கை வைத்திருக்கிறாரா? இல்லையா? என்பதற்குத் தான் அவர் பதில் கேட்கிறார்.

அமைச்சர் மதிவேந்தன்: யானை வழித்தடங்கள் பற்றி பொதுவாக தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. ஈஷா பற்றிய முழு விவரங்களை தெரிந்த பிறகுதான் நான் பதில் சொல்ல முடியும். தெரியாமல் அரைகுறையாக நான் எதையும் சொல்லக்கூடாது. அதுபற்றி ஆய்வு செய்த பிறகுதான் விதி முறைகளை மீறியிருக்கிறார்களா? தேவையான அனுமதியை பெற்றுள்ளார்களா? என்பதை பார்த்துவிட்டு விளக்கம் அளிக்கிறேன்" என்று அவர் கூறினார்.

## சென்னை 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தால் தமிழக அரசுக்கு நிதிச்சுமை: அமைச்சர் தங்கம் தென்னரசு

சென்னை, ஜூன் 27

சட்டசபையில் பேசிய நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:

சென்னை 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தால் தமிழக அரசுக்கு ரூ.12,000 கோடி அளவுக்கு நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. 2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான நிதி மத்திய அரசால் வழங்கப்படவில்லை. நாக்பூர், கொச்சி, புனே ஆகிய நகரங்களுக்கு 2ம் கட்ட மெட்ரோ திட்டங்களுக்கு மத்திய அரசு நிதியும், அனுமதியும் வழங்கியுள்ளது.

தமிழகத்துக்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.37,000 கோடி கோரப்பட்ட நிலையில், ரூ.232 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தமிழகத்திற்கு அநீதி இழைக்கப்படுகிறது. மாநில அரசுக்கான வரி பகிர்வு முறையாக வழங்கப்பட வேண்டும்.

மின் பகிர்மானத்திற்கு மத்திய அரசுக்கு கூடுதல் நிதி தமிழக அரசால் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# திறனாய்வுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஜூன் 27

அரசுத் தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நடைபெறவுள்ள தமிழ் நாடு முதல்அமைச்சரின் திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 20232024 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயின்று 20242025 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும்




மாணாக்கர்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள்www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக 21.06.2024 பிற்பகல் முதல் 26.06.2024 வரை பதிவேற்றம் செய்திட கால அவகாசம் வழங்கப்பட்டது.

தற்போது இக்கால அவகாசம் 03.07.2024 வரை நீட்டிக்கப்படுகிறது. என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்து அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்கள் விண்ணப்பித்திட தலைமையாசிரியர்களுக்கு கேட்டுக்கொள்ளப்படுகிறது.என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கள்ளக்காதலனை தேடி கந்தர்வகோட்டைக்கு வந்த வடமாநில இளம்பெண்

புதுக்கோட்டை, ஜூன் 27

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே ஒரு கிராமத்தை சோ்ந்த 24 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர், கடந்த ஓரிரு வருடங்களுக்கு முன்பு மத்தியபிரதேச மாநிலத்தில் கூலி வேலைக்கு சென்றார். அங்கு 23 வயதுடைய ஒரு இளம்பெண்ணுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டது. அந்த இளம்பெண்ணுக்கு திருமணமாகியிருந்தது. இருப்பினும் வாலிபர், அந்த இளம்பெண்ணுடன் நெருங்கி பழகி வந்துள்ளார்.

வடமாநிலம் சென்ற வாலிபர் அங்கு இந்தி மொழி கற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது. இதனால் அவர்களுக்குள் சகஜமாக பழகியிருக்கின்றனர். கடந்த ஓராண்டுக்கு முன்பு மத்தியபிரதேசத்தில் இருந்து கந்தர்வகோட்டைக்கு அந்த வாலிபர் வந்தார். தொடர்ந்து வடமாநிலத்தை சேர்ந்த அந்த இளம்பெண், வாலிபருடன் தொடர்பில் இருந்து செல்போனில் பேசி வந்துள்ளார்.

இந்த நிலையில் அந்த இளம்பெண் கடந்த சில நாட்களுக்கு முன்பு மத்தியபிரதேச மாநிலத்தில் இருந்து தனியாக புறப்பட்டு கள்ளக்காதலனை தேடி கந்தா்வகோட்டைக்கு வந்தார். அங்கு வாலிபாின் வீட்டில் கடந்த 4 நாட்களாக தங்கியிருந்தார். இதற்கிடையில் மனைவியை காணவில்லை என அந்த இளம்பெண்ணின் கணவர் அம்மாநில போலீசில் புகார் அளித்துள்ளார்.

புகாரின்பேரில் போலீசார் விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் காணாமல்போன இளம்பெண் தமிழகத்தில் கந்தர்வகோட்டையில் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து அந்த இளம்பெண்ணின் கணவர் மற்றும் பெற்றோருடன் தமிழகத்திற்கு புறப்பட்டு வந்தார். அவர்களுடன் மத்தியபிரதேச மாநில போலீசாரும் உடன் வந்தனர். அவர்கள் கந்தர்வகோட்டை போலீஸ் நிலையத்திற்கு நேற்று வந்து நடந்த விவரத்தை தெரிவித்தனர்.

இதையடுத்து அந்த கிராமத்திற்கு போலீசாரும், அந்த இளம்பெண்ணின் கணவரும் சென்றனர். அங்கு வாலிபர் வீட்டில் இருந்த இளம்பெண்ணை மீட்டு கந்தர்வகோட்டை போலீஸ் நிலையம் அழைத்து வந்தனர். வாலிபரிடம் போலீசார் விசாரணை நடத்தியதில், அந்த இளம்பெண் விருப்பப்பட்டு வந்ததாகவும், தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார்.

மேலும் கணவருடன் அந்த இளம்பெண்ணை அனுப்பி வைக்க அவர் சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து இளம்பெண்ணும் கணவருடன் செல்ல விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து இளம்பெண்ணை போலீசார் மீட்டு அவரது கணவருடன் மத்தியபிரதேசத்திற்கு அழைத்து செல்ல ஏற்பாடு செய்தனர். மனைவி தனக்கு திரும்ப கிடைத்த மகிழ்ச்சியுடன் அவரை கணவர் அழைத்துக்கொண்டு சொந்த ஊருக்கு திரும்பினார்.

கள்ளக்காதலனை தேடி மத்தியபிரதேச மாநில இளம்பெண் கந்தர்வக்கோட்டைக்கு வந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# எம்.ஆர்.விஜயபாஸ்கரை கைது செய்ய போலீசார் தீவிரம்

சென்னை, ஜூன் 27

கரூர், மேலக்கரூர் சார்பதிவாளர் (பொறுப்பு) முகமது அப்துல் காதர் என்பவர் கரூர் டவுன் போலீஸ் நிலையத்தில் ஒரு புகார் அளித்தார். அதில், கடந்த ஏப்ரல் மாதம் 6ந்தேதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வாங்கல் குப்புச்சிபாளையம் பிரகாஷ் மகள் சோபனா என்பவர் செட்டில்மெண்ட் மூலம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தினை கிரையம் எழுதி கொடுப்பதற்காக வந்தார். அவருடன் அந்த சொத்தை கிரையம் பெற 4 பேர் உடன் வந்தனர். அசல் ஆவணங்கள் தொலைந்து போய்விட்டதாகவும், அதுதொடர்பாக வில்லிவாக்கம் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு சி.எஸ்.ஆர். பெறப்பட்டுள்ளதாக கூறி அதன் நகலை ஆவணதாரர் சார்பில் 2 பேர் அளித்தனர். பின்னர் வெள்ளியணை சார்பதிவகத்தில் இருந்து மதிப்பறிக்கை பெற்றும், வில்லிவாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் வழங்கியதாக கொடுக்கப்பட்ட 'நான்டிரேசபிள்' (கண்டுபிடிக்க முடியவில்லை) சான்றிதழை பெற்றும் கடந்த மாதம் 10 ந்தேதி ஆவணம் நிலுவையில் இருந்து விடுவிக்கப்பட்டு ஆவணம் பதிவு செய்யப்பட்டது.



இந்நிலையில் கடந்த மாதம் 11ந் தேதி சோபனாவின்தந்தையான பிரகாஷ், போலியான நான்டிரேசபிள் சான்றிதழ் கொடுத்து பத்திரம் மோசடியாக பதிவு செய்யப்பட்டுள்ளது என மனு அளித்தார்.

எனவே போலியாக சான்றிதழை கொடுத்து கிரையம் பதிவு செய்த கிரைய தரப்பினர்கள், என்னை மிரட்டியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து எனக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது. அதன்பேரில் கரூர் டவுன் போலீசார், 7 பேர் மீது 8 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் தனது பெயரும் சேர்க்கப்படலாம் என நினைத்து முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கடந்த 12ந்தேதி முன்ஜாமீன் கேட்டு கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. வழக்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி சண்முகசுந்தரம் விசாரித்து, முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

மேலும் இந்த வழக்கை சிபிசிஐடி போலீசார் விசாரணை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நில மோசடி வழக்கில் சிக்கி தலைமறைவாக உள்ள அதிமுக முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரை கைது செய்ய சிபிசிஐடி போலீசார் தீவிரம் காட்டி வருகின்றனர். எம்.ஆர்.விஜயபாஸ்கர் வடமாநிலத்திற்கு தப்பிச் சென்றதாக கூறப்படும் நிலையில், அவரைபிடிக்க வடமாநிலங்களுக்கு போலீசார் விரைந்து ள்ளனர். விஜயபாஸ்கரின் முன் ஜாமின் மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் சிபிசிஐடி தனிப்படை போலீசார் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

# காருக்குள் தொழிலதிபர் கழுத்தை அறுத்து படுகொலை

குமரி, ஜூன் 27

குமரி மாவட்டம் களியக்காவிளை போலீஸ் நிலையம் அருகே ஒற்றாமரம் பகுதி உள்ளது. இது குமரி கேரள எல்லையாகும். இங்குள்ளசாலையோரம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு கேரள பதிவெண் கொண்ட ஒரு சொகுசு கார் வெகுநேரமாக நின்று கொண்டிருந்தது. அந்த கார் ஸ்டார்ட் செய்யப்பட்ட நிலையிலேயே நின்றது.

இதனால் சந்தேகம் அடைந்த அக்கம் பக்கத்தினர் அந்த காரின் அருகே சென்று எட்டி பார்த்தனர். அப்போது அவர்கள் கண்ட காட்சியால் அதிர்ச்சியில் உறைந்தனர். அதாவது காருக்குள் டிரைவர் இருக்கையில் ஒருவர் ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார்.

பின்னர் சுதாரித்துக் கொண்டு இதுகுறித்து அவர்கள் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். உடனே களியக்காவிளை போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். பிணமாக கிடந்தவரின் கழுத்து கொடூரமாக அறுக்கப்பட்டிருந்தது. இதனால் அவர் கழுத்தை அறுத்து கொல்லப்பட்டிருக்கலாம் என போலீசார் முடிவு செய்தனர்.

பிறகு கொலை செய்யப்பட்டவர் யார்? கொலையின் பின்னணி? தொடர்பாக விசாரணையை முடுக்கினர். இதைத் தொடா்ந்து பிணத்தை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். காரில் இறந்தவரின் ஆதார் அட்டை மற்றும் ஓட்டுனர் உரிமம் ஆகியவை கிடந்தது.



இதனை போலீசார் கைப்பற்றி விசாரணை நடத்தியதில் கொல்லப்பட்டவர் கேரள மாநிலம் திருவனந்தபுரம் பாப்பனம்கோடு கைமனம் பகுதியை சேர்ந்த சோமன் மகன் தொழிலதிபர் தீபு (வயது 44) என்பது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் பாப்பனம்கோடு கைமனம் பகுதிக்கு சென்று உறவினர்களிடம் விசாரணை நடத்தினர். இதில் திடுக்கிடும் தகவல் வெளியானது. படுகொலை செய்யப்பட்ட தீபுவுக்கு வேது மோள் (40) என்ற மனைவியும், மாதவ், மானசு என்ற 2 மகன்களும் உள்ளனர். மனைவி பாலக்காடு பகுதியில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார்.

தீபு திருவனந்தபுரத்தில் கல்குவாரி நடத்தி வந்தார். மேலும் பொக்லைன் எந்திரங்கள் வாங்கி விற்கும் தொழிலும் செய்து வந்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு கல்குவாரி மூடப்பட்டது. இதையடுத்து கல்குவாரியை மீண்டும் திறப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வந்தார். இதற்கிடையே புதிய பொக்லைன் எந்திரம் வாங்குவதற்காக நேற்று முன்தினம் ரூ.10 லட்சம் பணத்துடன் காரில் மதுரைக்கு புறப்பட்டார். இந்தநிலையில் தான் அவர் குமரி மாவட்டத்தில் காருக்குள்ளேயே கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார். ரூ.10 லட்சம் பணத்தையும் காணவில்லை. தீபு காரில் வரும் வழியில் ஒருவரை ஏற்றி வந்ததாக கூறப்படுகிறது.

அந்த நபர் தான் அவரை கொன்று விட்டு பணத்தை கொள்ளையடித்து சென்றிருக்கலாம் என போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் கூறப்படுகிறது.

இதுதொடர்பான சில தடயங்கள் போலீசாரிடம் சிக்கியுள்ளன. மேலும் இதுதொடர்பாக களியக்காவிளை போலீசார் வழக்குப்பதிவு செய்து பணம் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் கொலை நடந்ததா? அல்லது தொழில் போட்டியால் அவர் தீர்த்துக் கட்டப்பட்டாரா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இந்த கொலையில் ஈடுபட்டவரை பிடிக்க துணை போலீஸ் சூப்பிரண்டு உதயசூரியன் தலைமையில் 7 தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. கொடூரமாக கொல்லப்பட்ட தீபு கேரளாவை சேர்ந்தவர் என்பதால் கேரள போலீசாரும் இந்தவழக்கை உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

காருக்குள்ளே தொழிலதிபர் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் குமரி, கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஜீவனாம்சம் கேட்டு நோட்டீஸ்: ஆத்திரத்தில் மனைவியை சரமாரியாக வெட்டிய போலீஸ்காரர்

ராமநாதபுரம், ஜூன் 27

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதி எமனேசுவரம் சிலோன் காலனியைச் சேர்ந்தவர் ரமேஷ் பாபு. இவருடைய மகன் நாகேந்திரன் (33). இவர் திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை இடையூர் சங்கேந்தி போலீஸ் நிலையத்தில் போலீஸ்காரராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கும், பரமக்குடியைச் சேர்ந்த சர்மிளா (23) என்பவருக்கும் 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது.

கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த நிலையில், நாகேந்திரனின் பெற்றோருக்கும், சர்மிளாவுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து கணவர் வேலை பார்க்கும் ஊரில் சென்று சர்மிளா அவருடன் வாழ்ந்தார். பின்னர் பிரசவத்திற்காக சர்மிளா பரமக்குடியில் உள்ள அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்துள்ளார். அங்கு அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த குழந்தையை கணவர் நாகேந்திரனும்,





அவரது குடும்பத்தினரும் பார்க்க வரவில்லை என்று கூறப்படுகிறது.

பின்பு பெரியவர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்தி சர்மிளாவை மீண்டும் குழந்தையுடன் கணவர் நாகேந்திரன் பணியாற்றி வரும் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அங்கு கணவன் மனைவி இருவருக்கும் இடையே மீண்டும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் சர்மிளா குழந்தையுடன் புறப்பட்டு, பரமக்குடியில் உள்ள தனது தாயார் வீட்டுக்கு வந்துவிட்டார்.

அதைத்தொடர்ந்து தனக்கும், குழந்தைக்கும் ஜீவனாம்சம் கேட்டு பரமக்குடி கோர்ட்டில், சர்மிளா வழக்கு தொடர்ந்தார். அதில் வரும் 27ம்தேதி நாகேந்திரன், கோர்ட்டில் ஆஜராக உத்தரவிடப்பட்டு உள்ளது.

இந்நிலையில் நாகேந்திரன், விடுமுறையில் பரமக்குடி எமனேசுவரத்தில் உள்ள அவரது வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது அவருக்கு கோர்ட்டு மூலம் அனுப்பப்பட்ட சம்மன் கிடைத்துள்ளது. இதனால் ஆத்திரமடைந்த நாகேந்திரன் நேற்று முன்தினம் இரவு கையில் அரிவாளுடன் சர்மிளா வீட்டிற்கு சென்றுள்ளார்.

அங்கு அவர் சர்மிளாவுடன் சண்டையிட்டு தான் வைத்திருந்த அரிவாளால் தலை, கைகள், கழுத்தில் சரமாரியாக வெட்டியுள்ளார். சர்மிளாவின் அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்தனர். உடனடியாக இதுபற்றி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். பரமக்குடி நகர் போலீசார் சம்பவ இடத்திறகு விரைந்து வந்து அங்கேயே நின்றிருந்த நாகேந்திரனை மடக்கி பிடித்தனர்.

பலத்த காயம் அடைந்த சர்மிளா மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து சர்மிளாவின் தாயார் வசந்தி கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து நாகேந்திரனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# ரவுடி கொடூர கொலை; அடையாறு ஆற்றில் உடல் வீசப்பட்ட சம்பவம்: நண்பர்கள் உள்பட 5 பேர் கைது

சென்னை, ஜூன் 27

சென்னை சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலம் கீழே உள்ள அடையாறு ஆற்றின் கரையோரம் நேற்று வாலிபர் பிணம் மிதந்தது. இதனை பார்த்து அதிர்ச்சியடைந்த அப்பகுதி மக்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு வந்த கோட்டூர்புரம் போலீசார், தீயணைப்புத்துறையினர் உதவியுடன் உடலை மீட்டனர். அப்போது அந்த வாலிபரின் முகம் மற்றும் கழுத்து உள்ளிட்ட 7 இடங்களில் வெட்டு காயங்கள் இருந்ததையடுத்து மர்மநபர்கள் இவரை கொடூரமாக கொலை செய்து அடையாறு ஆற்றில் வீசி இருப்பது தெரியவந்தது.



இதனையடுத்து போலீசார் உடலை பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், அந்த நபர் கண்ணகிநகர் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பைச் சேர்ந்த ஆகாஷ் என்ற கருப்பு ஆகாஷ் (27) என்பது தெரியவந்தது.

இவர் கண்ணகிநகர் போலீஸ் நிலையத்தில் சரித்திர பதிவேடு ரவுடியாக இருந்துள்ளார். இந்த நிலையில் முன்விரோதம் காரணமாகவோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காகவோ ஆகாஷ் கொடூரமாக கொலை செய்யப்பட்டு, அடையாறு ஆற்றில் வீசப்பட்டு இருக்கலாம் என போலீசார் தெரிவித்திருந்தனர். ஆகாஷை கொலை செய்தவர்கள் யார்? என போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் ரவுடியை கொடூரமாக கொலை செய்து, அடையாற்றில் அவரது உடல் வீசப்பட்ட சம்பவத்தில், அவரது நண்பர்கள் உள்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சரக்கு வாங்கி கொடுத்து நண்பனே கொலைக்கு ஸ்கெட்ச் போட்டு கொடுத்தது விசாரணையில் அம்பலமாகி உள்ளது.

கடந்த வருடம் அருண் என்பவரின் நண்பனை வெட்டி கொன்ற வழக்கில் ஆகாஷ் ஜாமின் பெற்றுள்ளார். ஆகாஷை கொல்ல பலமுறை முயன்றும் முடியாத விரக்தியில் இருந்த அருண், ஆகாஷின் நண்பர்களின் உதவியை நாடியுள்ளார். இதனையடுத்து ஆகாஷிற்கு அதிக அளவு சரக்கை ஊற்றி கொடுத்து வெட்டி கொன்று சடலத்தை ஆற்றில் அருண் நண்பர்கள் வீசியதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

# பெங்களூருவில் தலைமறைவாக இருந்த பெண் சாராய வியாபாரி கைது: தனிப்படை போலீசார் அதிரடி

பெங்களூரு, ஜூன் 27

கள்ளக்குறிச்சி மாவட்டம் கச்சிராயப்பாளையம் அருகே, அக்கராயப்பாளையம்பகுதியைச்சேர்ந்த பெண் சாராய வியாபாரி சாமுண்டியை கைது செய்ய சிபிசிஐடி போலீசார் தனிப்படை போலீசாருக்கு உத்தரவிட்டனர். இதையடுத்து, தனிப்படை போலீசார் சாமுண்டியை தேடி வந்தனர்.

இந்த நிலையில் சாமுண்டி பெங்களூருவில் தலைமறைவாக இருந்தது தெரிய வந்ததால், அங்கு விரைந்த தனிப்படை போலீசார், சாமுண்டியை கைது செய்து கச்சிராயப்பாளையம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். தனது வீட்டின் பின்புறத்தில் இரண்டு லாரி டியூப்பில் 110 லிட்டர் சாராயத்தை சாமுண்டி பதுக்கி வைத்திருந்தது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து அவற்றை கொட்டி அழித்த போலீசார், சாமுண்டியை சிறையில் அடைத்தனர்.



# தமிழ்நாடு அரசு மதுபான கூடுதல் விலை கடை

மதுரை, ஜூன் 27

மதுரை மாவட்டம் எம் சத்திரப்பட்டி நத்தம் வழிச்சாலையில் இருந்து சற்று தொலைவில் அரசு மதுபான கடை இயங்கி வருகிறது இந்த கடையை சுற்றி பத்து பதினைந்துக் கிராமங்கள் இருக்கின்றன இங்கிருந்து சாதாரண கூலித் தொழிலாளர்கள் பல நபர்கள் இருக்கிறார்கள் இவர்கள் வேலை முடிந்து இங்குள்ள மதுபான



கடைகளில் வேலை முடிந்து மது வாங்கி அருந்துவது வழக்கம் இங்குள்ள கடையில் இங்கு ஒரு பாட்டிலுக்கு ஐந்து முதல் 50 வரை கூடுதல் கட்டணம் கடையில் வேலை செய்யும் பணி ஆட்கள் வாங்குகிறார்கள் என்று புகார் வந்தது இது சம்பந்தமாக அரசு மற்றும் டாஸ்மாக் நிறுவனம் கண்டு கொள்ளுமா ?

# கள்ளக்குறிச்சி: கருணாபுரத்தில் குஷ்பு விசாரணை

கள்ளக்குறிச்சி, ஜூன் 27

கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தை தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்திருக்கிறது. விஷ சாராய சம்பவத்தில் 6 பெண்கள் பலியாகி இருப்பதை குறிப்பிட்டுள்ள மகளிர் ஆணையம், அதன் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ள மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு தலைமையில் 3 பேர் கொண்ட விசாரணை குழுவை அமைத்துள்ளது.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி கருணாபுரம் கிராமத்தில் தேசிய மகளிர் ஆணையக்குழு உறுப்பினர் குஷ்பு மற்றும் 3 பேர் கொண்ட விசாரணை குழு நேரில் சென்று விசாரணை நடத்தியது. மேலும் விஷ சாராயம் குடித்து உயிரிழந்த, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அதன்பின்னர் குஷ்பு கூறியதாவது:

விஷ சாராயம் குடித்தவர்களில் சிலருக்கு பார்வை பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய மனநல ஆலோசனை வழங்க வேண்டும். பெண்கள் சாராயம் குடிக்கும் அளவிற்கு கள்ளக்குறிச்சி போலீஸ் என்ன செய்தது?. விஷ சாராயம் குடித்து பாதிக்கப்பட்டதில் இளைஞர்கள் அதிகமாக உள்ளனர். கள்ளச்சாராய விற்பனையை முற்றிலும் ஒழிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# சட்டசபை கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட்: உண்ணாவிரத போராட்டம் நடத்த அ.தி.மு.க முடிவு

சென்னை, ஜூன் 27

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் 20ந் தேதி முதல் நடைபெற்று வரும் நிலையில், கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரத்தை கண்டித்து அதிமுகவினர் கடந்த 3 நாட்களாக கருப்பு சட்டை அணிந்து சட்டசபைக்கு வந்தனர். கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரம் தொடர்பாக கடும் அமளியில் ஈடுபட்டதுடன், சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இந்த நிலையில், சட்டசபை கூட்டத்தொடரின் இன்றைய நிகழ்வுகள் தொடங்கி நடைபெற்று வருகிறது. இன்றைய கூட்டத்திலும்



அதிமுகவினர் கருப்பு சட்டை அணிந்து வந்தனர். கூட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் கள்ளக்குறிச்சி விஷ சாராயம் விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்த கோரி மீண்டும் கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து அவர்களை வெளியேற்ற சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார். அதையடுத்து அதிமுக எம்.எல்.ஏக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அதனை தொடர்ந்து நடப்பு சட்டசபை கூட்டத்தொடர் முழுவதும் அதிமுக உறுப்பினர்களை சஸ்பெண்ட் செய்து சபாநாயகர் அப்பாவு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில் , சட்டசபை கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்ததை கண்டித்து உண்ணாவிரத போராட்டம் நடத்த அ.தி.மு.க முடிவு செய்துள்ளது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் போரா அனுமதி கோரி மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் அ.தி.மு.க சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# சட்டசபை கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட்: உண்ணாவிரத போராட்டம் நடத்த அ.தி.மு.க முடிவு

சென்னை, ஜூன் 27

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் ஆணவக் குற்றங்கள் அதிகரித்து வருவதால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய சட்ட ஆணையம், சுப்ரீம் கோர்ட்டு ஆகியவற்றின் அறிவுறுத்தலின் அடிப்படையில் சிறப்பு சட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு இயற்றவேண்டும்; அதுவரை சுப்ரீம் கோர்ட்டு 2018ல் தனது ஆணையில் குறிப்பிட்ட நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

ஆணவக் குற்றங்களைத் தடுப்பதற்காக சுப்ரீம் கோர்ட்டின் ஆலோசனையின் அடிப்படையில் 2012ம் ஆண்டு இந்திய சட்ட ஆணையம் 'சட்டவிரோதக் கூட்டம் (திருமண சுதந்திரத்தில் தலையிடுதல்) தடுப்புச் சட்டம்' ( *Prohibition of Unlawful Assembly (Interference with the Freedom of Matrimonial Alliances) Act* ) என்ற சட்ட மசோதாவை உருவாக்கியது. ஆனால் அந்த மசோதாவை சட்டமாக்காமல் இந்திய ஒன்றிய அரசு கிடப்பில் போட்டு வைத்திருக்கிறது. சட்டம் ஒழுங்கு என்பது மாநில அரசின் அதிகார வரம்பின்கீழ் வருவதால் அந்த சட்ட மசோதாவைத் தமிழ்நாடு அரசு சட்டமாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

2018ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் தேதி சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா, நீதிபதி ஏ.எம்.கன்வில்கர், நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் ஆகியோர் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்பு, ஆணவக் கொலைகளைத் தடுப்பதற்கு ஒன்றிய அரசு சிறப்பு சட்டம் ஒன்றை இயற்றவேண்டும் என உத்தரவிட்டிருப்பதோடு அப்படி சட்டம் இயற்றும்வரை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் பின்பற்றவேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளையும் பட்டியலிட்டிருந்தது.

'வயதுவந்த இருவர் மனம் ஒப்பித் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தால் அதற்கு குடும்பத்தின் அனுமதியோ, சாதி, சமூகம் ஆகியவற்றின் அனுமதியோ தேவை இல்லை' எனத் தெளிவாகக் கூறியிருக்கும் சுப்ரீம் கோர்ட்டு, தடுப்பு நடவடிக்கைகள், நிவாரண நடவடிக்கைகள், தண்டிக்கும் நடவடிக்கைகள் என மூன்று தலைப்புகளில் பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை அளித்திருக்கிறது:

"ஆணவக் குற்றங்கள் அதிகமாக நடைபெறும் பகுதிகளை மாநில அரசுகள் உடனடியாகக் கண்டறியவேண்டும். அந்தப் பகுதிகளின் காவல் அதிகாரிகளுக்கு அதுகுறித்து விழிப்போடு இருக்குமாறு அறிவுறுத்தவேண்டும்; அந்தப் பகுதிகளில் எங்காவது சாதிப் பஞ்சாயத்து / சாதிக் கூட்டம் கூடுவதாக செய்தி கிடைத்தால் அதை உயர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும்; செய்தி கிடைத்ததும் டிஎஸ்பி மட்டத்தில் உள்ள அதிகாரி அந்தப் பகுதிக்குச் சென்று சாதிப் பஞ்சாயத்து / சாதி கூட்டம் கூடக் கூடாது என மக்களிடம் எடுத்துரைக்கவேண்டும்; அதையும் மீறி சாதி பஞ்சாயத்து நடந்தால் அங்கேயே டிஎஸ்பி இருக்கவேண்டும்; அந்தப் பஞ்சாயத்தின் நடவடிக்கைகளை வீடியோ பதிவு செய்ய வேண்டும்; அந்த கூட்டம் சட்டவிரோதமான முடிவுகளை எடுப்பதற்க்காகத் தான் கூடுகிறது என டிஎஸ்பி சந்தேகித்தால் அதைத் தடுப்பதற்கு சிஆர்பிசி 144 பிரிவின்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கலாம்; பிரிவு 151ன் கீழ் கைதும் செய்யலாம். ஆணவக் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் மாநில அரசுகளோடு இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்."

"தடுப்பு நடவடிக்கைகளையும் மீறி சாதி பஞ்சாயத்து / சாதி கூட்டம் கூடப்பட்டால் ஐபிசி பிரிவுகள் 141, 143, 503 மற்றும் 506ன் கீழ் வழக்குப்பதிவு செய்யவேண்டும்; அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் கலப்பு மணத் தம்பதியினரைப் பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச்செல்லவேண்டும்; ஒவ்வொரு மாவட்டத்திலும் அத்தகைய கலப்பு மணத் தம்பதியினர் பாதுகாப்போடு இருப்பதற்கு ஏற்ற பாதுகாப்பு இல்லங்களைத் துவக்குவது குறித்து மாநில அரசுகள் சிந்திக்கவேண்டும்; கலப்பு மணம் செய்துகொள்ள விரும்புவோர் சட்டப்படியான வயதை எட்டியவர்களாக இருந்தால் அந்தத் திருமணம் நடைபெறுவதற்கான பாதுகாப்பைக் காவல்துறை தரவேண்டும்; தங்களது திருமணத்தை கவுரவத்தின் பெயரால் அவர்களது சாதியினரோ, குடும்பத்தினரோ, மற்ற எவருமோ எதிர்ப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டால் அதை டிஎஸ்பி விசாரித்து எஸ்பிக்கு அறிக்கை அளிக்கவேண்டும்; அந்த அறிக்கையின் அடிப்படையில் எஸ்பி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஆணையிடவேண்டும்."

"இந்த வழிகாட்டு நெறிமுறைகளை காவல்துறையைச் சேர்ந்தவர்களோ மாவட்ட அதிகாரிகளோ பின்பற்றத் தவறினால் அதை வேண்டுமென்றே செய்த தவறாகக் கருதி அவர்கள் மீது உரிய துறைவாரியான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆறு மாதங்களுக்குள் தண்டனை வழங்கப்படவேண்டும்; ஆறுமுகம் சேர்வை வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பின் அடிப்படையில் ஆணவக் குற்றங்களைத் தடுக்கத் தவறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; கலப்புமணத் தம்பதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பாக வரும் புகார்களைப் பெறவும் விசாரிக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்பி, மாவட்ட சமூகநல அதிகாரி, மாவட்ட அதிதிராவிட நலத்துறை அதிகாரி ஆகியோர் அடங்கிய சிறப்புப் பிரிவு ஒன்றை மாநில அரசுகள் உருவாக்கவேண்டும்; இந்த சிறப்புப் பிரிவுகளில் 24 மணி நேர 'ஹெல்ப்லைன்' வசதி இருக்கவேண்டும்; ஆணவக் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் அதற்கென உருவாக்கப்படும் விரைவு நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட வேண்டும்".

இவ்வாறு கூறியிருக்கும் சுப்ரீம் கோர்ட்டு இந்த உத்தரவு இனிமேல் பதியப்படும் வழக்குகளுக்கு மட்டுமின்றி ஏற்கனவே கிடப்பில் இருக்கும் வழக்குகளுக்கும் பொருந்தும் எனத் தெளிவுபடுத்தியிருக்கிறது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் அனைத்து மாநில அரசுகளும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் கண்டிப்போடு சுப்ரீம்கோர்ட்டு கூறியிருந்தது.

சுப்ரீம் கோர்ட்டு குறிப்பிட்ட நடைமுறைகளை 2021 வரை ஆட்சியில் இருந்த அ.தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்தவில்லை. அதன்பின்னர் தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் வி.சி.க. சார்பில் முதல்அமைச்சரிடம் கடிதம் மூலம் இதை சுட்டிக் காட்டினோம். முதல் அமைச்சர் தலைமையில் மாநில அளவிலான விழிப்பு கண்காணிப்புக் குழு கூட்டம் 2021 ஆகஸ்டில் நடைபெற்றபோது அங்கும் இதை எழுத்துப் பூர்வமாக முன்வைத்தோம். தற்போது சிபிஐ எம் கட்சியின் மாவட்ட அலுவலகத்தையே சாதி ஆணவக் குற்றவாளிகள் தாக்கிய அதிர்ச்சி அளிக்கும் சம்பவம் நடைபெற்றிருக்கும் நிலையில், சாதி ஆணவக் குற்றங்களைத் தடுப்பதற்கான சிறப்புச் சட்டம் இயற்றவேண்டும் எனவும், அதுவரை சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை செயல்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வரலாற்றுத் திரிபு வாதங்களை அண்ணாமலை நிறுத்திக் கொள்வது நல்லது செல்வப்பெருந்தகை

சென்னை, ஜூன் 27

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரையிலும், மணிப்பூரில் இருந்து மும்பை வரையிலும் தேசிய ஒற்றுமை பயணங்களை மேற்கொண்டு மக்களை நேரடியாக சந்தித்து உரையாடி, பிரச்சினை களை புரிந்து கொண்டு அதற்காக குரல் கொடுத்து மக்கள் தலைவராக உயர்ந்து நின்ற தலைவர் ராகுல்காந்தி மக்களவையின் எதிர்கட்சித் தலைவராக இன்று பொறுப்பேற்பது நாட்டு மக்களிடையே மிகுந்த எழுச்சியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த மக்களவை தேர்தலில் 10 ஆண்டுகால நரேந்திர மோடியின் மக்கள் விரோத, பாசிச, அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து தமது பரப்புரையின் மூலம் மக்கள் மன்றத்தில் நியாயம் கேட்டவர் ராகுல்காந்தி. அவரது பரப்புரையின் காரணமாக பா.ஜ.க.வுக்கு மீண்டும் ஆட்சி அமைய அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சி 99 இடங்களில் வெற்றி பெற்று அரசமைப்புச் சட்டத்தின்படி பாராளுமன்ற ஜனநாயகம் வழங்கியிருக்கிற எதிர்கட்சித் தலைவர் என்ற பதவியை முதன்முறையாக தலைவர் ராகுல்காந்தி பெற இருக்கிறார். இது இந்திய ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகும். ராகுல்காந்தி நியமனத்தை தமிழ்நாடு வரவேற்று மகிழ்கிறது. நெருக்கடி நிலை முடிந்தவுடன் ராஜீவ்காந்தியும், சஞ்ஜய் காந்தியும் ஆட்சியாளர்களுக்கு பயந்து வெளிநாடுகளுக்கு தப்பியோட முயன்றார்கள் என்று ஒரு அப்பட்டமான அவதூறு செய்தியை அண்ணாமலை கூறியிருக்கிறார். அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின்படிதான் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி நெருக்கடி நிலையை அறிவித்தார். நெருக்கடி நிலை முடிந்ததும் பிரதமர் இந்திரா காந்தி நடத்திய தேர்தலில் அவரே வெற்றி வாய்ப்பை இழந்ததின் மூலம் ஜனநாயகத்தை உலகத்திற்கு நிரூபித்தார்.

எந்த நிலையிலும் எவருக்கும் அஞ்சாமல் விடுதலைப் போராட்ட காலத்தில் பல ஆண்டுகாலம் சிறையில் இருந்த நேரு பாரம்பரியத்தில் வந்த இந்திரா காந்தியின் பெருமையை விடுதலைப் போராட்டத்தில் கடுகளவும் பங்கு பெறாத ஆர்.எஸ்.எஸ். வழிவந்த பா.ஜ.க. அறிந்திருக்க வாய்ப்பில்லை. நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான் அண்ணாமலை அறிந்திருக்க வாய்ப்பே இல்லை. எனவே, வரலாற்றுத் திரிபு வாதங்களை அண்ணாமலை நிறுத்திக் கொள்வது நல்லது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சட்டசபையில் இருந்து பா.ம.க உறுப்பினர்கள் வெளிநடப்பு

சென்னை, ஜூன் 27

சட்டசபை கூட்டத்தொடரின் இன்றைய நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் 2021ம் ஆண்டு மேற்கொள்ள வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டும் என்றும் அத்துடன் சாதிவாரியான கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி சட்டசபையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தனித் தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தனித் தீர்மானம் குரல் வாக்கெடுப்பின் மூலம்



ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் வன்னியர் உள் இடஒதுக்கீடு குறித்து பேச வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று கூறி சட்டசபையில் இருந்து பா.ம.க உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த பா.ம.க. எம்.எல்.ஏ. வெங்கடேஸ்வரன் கூறியதாவது:

வன்னியர் 10.5% உள் இடஒதுக்கீடு குறித்து பேச வாய்ப்பு வழங்கப்படவில்லை. வன்னியர் உள் இடஒதுக்கீடு தொடர்பாக மூன்று ஆண்டுகளாக பேசுகிறோம். மத்திய அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கூறி தமிழக அரசு காலம் தாழ்த்துகிறது. இடைத்தேர்தலை ஒட்டி தொகுதியில் அமைச்சர்கள் ஒரு கருத்து பேசுகின்றனர். ஆனால் பேரவையில் பேச வாய்ப்பு மறுக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# கர்நாடகாவிடம் காவிரி நீரை பெறாமல் வேடிக்கை பார்ப்பதா? தமிழக அரசுக்கு ஜி.கே.வாசன் கண்டனம்

சென்னை, ஜூன் 27

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

கர்நாடக அரசு தமிழகத்துக்கான காவிரி நீரை திறந்து விடுவதில் முரண்படுவது கண்டிக்கத்தக்கது. ஜூன் 24 வரை 7.236 டி.எம்.சி. தண்ணீரை திறந்துவிடவும், ஜூலை மாதத்திற்கு 31.24 டிஎம்சி தண்ணீரை திறந்து விடவும் காவிரி மேலாண்மை ஆணையத்தால் கர்நாடக அரசுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டது. ஆனால் ஜூன் மாதத்திற்கே இன்னும் 5.376 டி.எம்.சி. தண்



ணீரை திறந்து விடாமல் காலம் தாழ்த்துகிறது கர்நாடக அரசு. இப்படி தமிழ நாட்டிற்கான காவிரி நீரை உரிய காலத்தில் திறந்து விடாததால் தமிழக விவசாயத்திற்கும், குடிநீருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விவசாயிகளும், பொது மக்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

காவிரி நீரை தர மறுக்கும் கர்நாடக அரசின் செயல்பாட்டை தமிழக அரசு எக்கோணத்தில் பார்க்கிறது என்று தெரியவில்லை. தமிழகத்தில் மேட்டூர் அணை திறக்கப்படாமல் போதிய தண்ணீர் கிடைக்காமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடரக்கூடாது. எனவே ஜூன், ஜூலை மாதத்திற்கு கர்நாடக காவிரியிலிருந்து தமிழகத்துக்கு கிடைக்க வேண்டிய உரிய நீரை காலத்தே தமிழக அரசு கர்நாடக அரசை வலியுறுத்தி பெற்றுத்தர வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மாநில அரசு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முடியாதா? முதல்அமைச்சர் பொய்யுரைக்கக் கூடாது: ராமதாஸ்

சென்னை, ஜூன் 27

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த மத்திய அரசுக்கு மட்டும் தான் அதிகாரம் உண்டு என்றும், 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகளால் சாதி வாரிகணக்கெடுப்பு நடத்த முடியாது என்றும் சட்டப்பேரவையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருக்கிறார். முதல் அமைச்சர் கூறியிருப்பது அப்பட்டமான பொய்; சமூகநீதியை தடுக்க முதல்அமைச்சரே பொய்யுரைக்கக் கூடாது.



இந்தியா முழுவதும் 2021&ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பை சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பாக நடத்த வேண்டும் என்று கோரி தமிழக சட்டப்பேரவையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானத்தை அறிமுகப்படுத்தி பேசிய அவர், நாடாளுமன்றத்தில் 2008&ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகளால் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த முடியாது என்று கூறியிருக்கிறார். முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த கருத்து பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டில் சமூகநீதியை குழிதோண்டி புதைக்க வேண்டும் என்ற சமூக அநீதி எண்ணம் கொண்டவர்களால் மட்டும் தான் இப்படி அப்பட்டமாக பொய் கூற முடியும்.

தமிழ்நாட்டில் சமுகநீதி மலரக் கூடாது என்று முதல் அமைச்சர் விரும்புகிறாரா? அல்லது முதல்அமைச்சரை சுற்றியுள்ள சக்திகள் அவருக்கு தவறான தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் அளித்து தவறான பாதையில் அழைத்துச் செல்கிறார்களா? என்று தெரியவில்லை. எப்படியிருந்தாலும் அது மிகவும் ஆபத்தானது. சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் இல்லை என்று இதுவரை கூறிவந்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இப்போது 2008 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகளால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முடியாது என்று கூறியிருக்கிறார். சாதிவாரி கணக்கெடுப்பு விவகாரத்தில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டுள்ள இந்த நிலைப்பாடு தமிழ்நாட்டில் சமூகநீதியை பாதுகாக்க முடியாத நிலையை உருவாக்கி விடும். இந்நிலைப்பாட்டை முதல்அமைச்சர் மாற்றிக் கொள்ள வேண்டும்.

2008ஆம் ஆண்டில் புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகளால் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த முடியும். நாடாளுமன்றத்தில் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமே மக்கள் நலத்திட்டங்களுக்கான பயனாளிகளை தேர்வு செய்வதற்கான சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட பல்வேறு புள்ளிவிவரங்களை திரட்டுவதற்காகத் தான். இந்த சட்டத்தின் இரண்டாவது அத்தியாயத்தில் மூன்றாவது பத்தியில்,''எந்த ஒரு மாநில அரசோ, யூனியன் பிரதேச அரசோ முறையான அறிவிக்கையை வெளியிட்டு, இந்த சட்டத்தின் பிரிவுகளின் அடிப்படையில் புள்ளிவிவரக் கணக்கெடுப்பின் மூலம் பொருளாதார, மக்கள் தொகை, சமூக, அறிவியல், சுற்றுச்சூழல் குறித்த விவரங்களைத் திரட்ட முடியும்'' என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த மாநில அரசுகளுக்கு உறுதியான அதிகாரம் உள்ளது. மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தாமல் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுப்பது மாநில அரசின் அதிகாரத்தை அடகு வைக்கும் செயல் ஆகும்.

இந்தியாவில் பீகார், கர்நாடகா , ஒடிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மாநில அரசுகளால் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. தெலுங்கானா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் இத்தகைய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இந்த கணக்கெடுப்புகள் அனைத்துமே 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி தான் நடத்தப்பட்டுள்ளன. பீகார் மாநிலத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டதை எதிர்த்து அம்மாநில உயர்நீதிமன்றத்திலும், பின்னர் உச்சநீதிமன்றத்திலும் தொடரப்பட்ட வழக்குகளின் விசாரணையின் போது சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவதற்கு மத்திய அரசுக்கு மட்டும் தான் அதிகாரம் உண்டு என்று மத்திய அரசின் சார்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

பீகார் அரசின் சார்பில் அதற்கு அளிக்கப்பட்ட பதிலில், 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு உள்ளிட்ட அனைத்து வகையாக தரவு சேகரிப்புகளையும் செய்யலாம் என்று கூறப்பட்டது. அதை உச்சநீதிமன்றமும், பிகார் உயர்நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டன. இந்த விவரங்கள் எதையும் அறியாமல் யாரோ கொடுத்த தவறான தகவல்களின் அடிப்படையில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்த முடியாது என்று முதல்அமைச்சர் கூறியிருக்கக் கூடாது. அது தவறு. இதற்காக அவர் வருத்தம் தெரிவிக்கவேண்டும். அதுமட்டுமின்றி இத்தகைய பொய்களை மீண்டும், மீண்டும் கூறக்கூடாது.

2008 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் அதை நீதிமன்றங்கள் ரத்து செய்யும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதும் தவறு ஆகும். பீகார் மாநில அரசு நடத்திய சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு செல்லும் என்று பிகார் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை உச்சநீதிமன்றமும் நிராகரித்து விட்டது. அவ்வாறு இருக்கும் போது புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் அது செல்லாது என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுவது இரண்டாவது பொய்.

இவை அனைத்துக்கும் மேலாக மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பையும் சேர்த்து மத்திய அரசு நடத்தினால் அது முழுமையானதாக இருக்காது. அதில் தலைகளின் எண்ணிக்கை மட்டும்தான் இருக்கும். பீகாரில் நடத்தப்பட்டது போன்று, மாநில அரசே நடத்தினால்தான் அதில் ஒவ்வொரு சமுதாய மக்களின் சமூக பின்தங்கிய நிலைமை குறித்த விவரங்கள் இடம் பெற்று இருக்கும். இதை உணர்ந்து 2008ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் சேகரிப்பு சட்டத்தின்படி தமிழ்நாட்டில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்துவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நமது தின கனி
Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
27.6.2024

## 'நான் நடிகையாகாமல் இருந்திருந்தால்...' ருக்மணி வசந்த்



கன்னடசினிமாவில்முன்னணிநடிகையாகஇருப்பவர் ருக்மணிவசந்த்.இவர்தமிழில்விஜய்சேதுபதிஜோடியாக 'ஏஜ்' படத்திலும், சிவகார்த்திகேயன் ஜோடியாகவும் நடித்து வருகிறார்.

இந்நிலையில், நடிகை ருக்மணி வசந்த் அளித்துள்ள பேட்டியில் பாலிவுட்டில் இருந்து ஹாலிவுட் வரை தென்னிந்திய படங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கின்றன என்று கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

'கே.ஜி.எப், காந்தாரா, புஷ்பா போன்ற படங்களுக்கு பிறகு அனைவரது பார்வையும் மலையாளம் உள்பட தென்னிந்திய படங்கள் பக்கம் திரும்பி இருக்கிறது. பாலிவுட்டில் இருந்து ஹாலிவுட் வரை தென்னிந்திய படங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைக்கின்றன. வித்தியாசமான கதையம்சம் உள்ள படங்களுக்கு ரசிகர்கள் ஆதரவு கொடுப்பது நடிகர்நடிகைகளுக்கு புதிய உற்சாகத்தை கொடுக்கிறது.

நான் நடிகையாகாமல் இருந்திருந்தால் ஆசிரியையாகி இருப்பேன். சினிமாவுக்கு வந்த பிறகு எனது மொத்த வாழ்க்கையும் மாறிவிட்டது. முதல் படத்தில் இருந்து வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன. நான் தற்போது தமிழ் படங்களில் நடிப்பதால் தமிழ் மொழியை கற்றுக்கொள்வதிலும், தமிழ் கலாசாரத்தை தெரிந்து கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறேன்'' என்றார்.

## 'கல்கி 2898 ஏடி' கமல்ஹாசன் எத்தனை மொழிகளில் டப்பிங் பேசியுள்ளார் தெரியுமா?



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம், 'கல்கி 2898 ஏடி'. இதில் அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உள்பட பலர் நடிக்கின்றனர். இதில், கமல்ஹாசன் வில்லனாக நடித்துள்ளார்.

கதாநாயகன்பிரபாஸின்அறிமுகவீடியோசிலமாதங்களுக்கு முன் வெளியாகி வரவேற்பை பெற்றது. அமிதாப் பச்சனின் தோற்றமும் அண்மையில் வெளியானது. அதேபோல, கடந்த சில தினங்களுக்கு முன்பு கல்கி படத்தின் ஐந்தாவது சூப்பர் ஸ்டார் பைரவாவின் சிறந்த நண்பரும் வாகனமுமான "புஜ்ஜி" அறிமுகம் ஆனது. சமீபத்தில், இப்படத்தின் இரண்டு டிரெய்லர்கள் அடுத்தடுத்து வெளியாகி வைரலாகின. இந்த படத்திற்காக நடிகர் கமல்ஹாசன் 5 மொழிகளில் டப்பிங் பேசியுள்ளார். இப்படம் நாளை உலகம் முழுவதும் வெளியாக உள்ளது. மேலும், கமல் நடிப்பில் உருவாகியுள்ள இந்தியன் 2 படமும் அடுத்த மாதம் 12ம் தேதி வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது. கமல்ஹாசன் படங்கள் அடுத்தடுத்து வெளியாக உள்ளதால் அவரது ரசிகர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## திருமணத்திற்கு தயாரான ரஜினி பட நடிகை?



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகையாக இருப்பவர் நிவேதா தாமஸ்.இவர்தமிழ்,தெலுங்குமற்றும்மலையாளமொழித்திரைப்படங்களில் நடித்து வருகிறார். இவர் தமிழில் விஜய் நடிப்பில் வெளியான 'ஜில்லா' படத்தில் நடித்து பிரபலமானார். அதனைத்தொடர்ந்து கமல்ஹாசனுடன் 'பாபநாசம்' மற்றும் ரஜினியுடன் 'தர்பார்' படங்களிலும் நடித்திருக்கிறார்.

இந்நிலையில், இவரின் தற்போதைய பதிவு இணையத்தில் பேசு பொருளாகியுள்ளது. அதன்படி இவர் தனது எக்ஸ் பக்கத்தில், 'அதிக நாளாகிவிட்டது.. ஆனால்.. இறுதியாக..' என்று இதய எமோஜுடன் பதிவிட்டுள்ளார். இதனைப்பார்த்த ரசிகர்களில் சிலர் புதிய படம் குறித்த அறிவிப்பா? என்றும் சிலர் விரைவில் திருமணம் செய்யப்போகிறார் என்றும் கருத்து பதிவிட்டு வருகின்றனர்.

நிவேதா தாமஸ் காதலில் விழுந்தாரா? அல்லது புதிய படத்தில் ஒப்பந்தமானது குறித்து பதிவு போட்டு இருக்கிறாரா? என்பது உறுதியாக தெரியவில்லை.

## மகள்களின் விருப்பத்தை நிறைவேற்றிய நடிகர்: 16 ஆண்டுகளுக்கு பிறகு காதல் மனைவியுடன் திருமணம்



மலையாள காமெடி நடிகர் தர்மஜன் போல்காட்டி. இவருக்கும், கொச்சியை சேர்ந்த அனுஜா என்பவருக்கும் கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்பு காதல் மலர்ந்தது. அவர் பெற்றோரின் எதிர்ப்பை மீறி வீட்டில் இருந்து வெளியேறி அனுஜாவை கரம் பிடித்து திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு வேதா, வைகா என 2 மகள்கள் உள்ளனர்.

இந்தநிலையில்தர்மஜன்போல்காட்டி மனைவி அனுஜாவுடன்கொச்சி அருகே கொங்கோர்பள்ளி மகாதேவர் கோவிலுக்கு வந்தார். அங்கு சாமி தரிசனம் செய்தார். இருவரும் மாலை மாற்றிக்கொண்டனர். பின்னர் மகள்கள் விருப்பப்படி காமெடி நடிகர் தர்மஜன் போல்காட்டி மற்றும் அனுஜா திருமணம் செய்தனர்.

நிகழ்ச்சியில் மகள்கள் வைகா, வேதா மற்றும் நெருங்கிய உறவினர்கள் கலந்து கொண்டனர். இதையடுத்து அவர்கள் குடும்பத்தினருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு கொங்கையர் பள்ளி பதிவு அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்தனர்.

## 'பள்ளியில் படிக்கும்போது...' காதலன் குறித்து மனம் திறந்த லட்சுமி மேனன்



'கும்கி', 'சுந்தரபாண்டியன்' உள்ளிட்டப் பல படங்களில் நடித்துப் பிரபலமானவர் நடிகை லட்சுமி மேனன். வேதாளம் படத்தில் அஜித்துக்கு தங்கையாக நடித்திருந்தார். 'நான் சிகப்பு மனிதன்', 'ஜிகர்தண்டா', 'கொம்பன்' என இவர் நடித்தப் படங்கள் அடுத்தடுத்து இவருக்கு கைக்கொடுத்தாலும், நடிகர் விஷாலுடன் ஏற்பட்ட காதல் கிசுகிசு சினிமாவில் இவருக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் படிப்பிலும் கவனம் செலுத்த வேண்டி இருந்ததால் சினிமாவிற்கு சில காலம் பிரேக் விட்டார். இப்போது சினிமாவில் கம்பேக் கொடுத்துள்ளார் லட்சுமி மேனன்.

இந்நிலையில், நடிகை லட்சுமி மேனன் தனது காதலன் குறித்து பகிர்ந்தார். அப்போது அவர் பேச்கையில்,

பள்ளியில் படிக்கும்போது ஒருவரிடம் காதலை சொன்னேன். சில நாட்கள் கழித்து அவர் காதலுக்கு சம்மதம் தெரிவித்தார். அடிக்கடி நாங்கள் தொலைபேசியில் பேசிக்கொண்டோம்.

குடும்பத்தினருக்கு தெரியாமல் இருக்க போர்வைக்குள் இருந்து கொண்டு பேசுவேன். சினிமா வாய்ப்புகள் வந்ததால் படிப்பையும், காதலையும் தொடர முடியவில்லை. அவருக்கு சமீபத்தில் திருமணம் நடந்ததாக கேள்விப்பட்டேன். என்றார்

தற்பொழுது லட்சுமி மேனன் 'ஈரம்' படத்தை இயக்கிய அறிவழகன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'சப்தம்' திரைப்படத்தில் நடித்துள்ளார்.

## மகாராஜா பட இயக்குனரை சந்தித்த சிவகார்த்திகேயன்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் விஜய் சேதுபதி. இவர் தற்போது இயக்குனர் நித்திலன் சாமிநாதன் இயக்கத்தில் மகாராஜா திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படம் கடந்த 14ம் தேதி வெளியானது. விஜய் சேதுபதியின் 50வது படமாக உருவான இது, ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழ், தெலுங்கில் தயாரான இப்படத்தின் திரைக்கதை உருவாக்கமும், நடிகர்களின் நடிப்பும் பேசப்பட்டு வருகின்றன. இப்படம் வெளியாகி இரண்டு வாரங்கள் ஆனநிலையில், ரூ.75 கோடிக்கு மேல் வசூலித்துள்ளது.

இந்நிலையில், நடிகர் சிவகார்த்திகேயன் மகாராஜா பட இயக்குனரை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்தான புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது. தற்போது நடிகர் சிவகார்த்திகேயன் எஸ்கே 23 படத்தில் நடித்து வருகிறார்.

## மல்லோர்கா ஓபன் டென்னிஸ்: யூகி பாம்ப்ரி ஜோடி காலிறுதிக்கு முன்னேற்றம்

ஸ்பெயின் நாட்டில் மல்லோர்கா சாம்பியன்ஷிப் ஓபன் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டம் ஒன்றில்

இந்தியாவின் யூகி பாம்ப்ரி அல்பனோ ஆலிவெட்டி (பிரான்ஸ்) ஜோடி, இந்தியாவின் என். ஸ்ரீராம் பாலாஜி லூக் ஜான்சன் (இங்கிலாந்து) ஜோடியை எதிர்கொண்டது.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாம்ப்ரி ஜோடி 63, 63 என நேர் செட் கணக்கில் இந்தியாவின் என். ஸ்ரீராம் பாலாஜி லூக் ஜான்சன் (இங்கிலாந்து) ஜோடியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் யூகி பாம்ப்ரி இணை காலிறுதிக்கு முன்னேறியது. நாளை நடைபெற இருக்கும் காலிறுதியில் பாம்ப்ரி ஆலிவெட்டி ஜோடி அமெரிக்காவின் வித்ரோ லம்மோன்ஸ் ஜோடியை எதிர்கொள்கிறது.

## சர்வதேச டி20 போட்டிகளில் அதிக முறை 4 விக்கெட்: ரஷித் கான் புதிய சாதனை



டி20 உலகக்கோப்பை தொடரில் இன்று நடந்த சூப்பர் 8 சுற்றின் கடைசி லீக் ஆட்டத்தில் வங்காளதேசத்தை ஆப்கானிஸ்தான் அணி வீழ்த்தியது. அத்துடன் அரையிறுதி சுற்றுக்கும் முன்னேறியது. அரையிறுதியில் ஆப்கானிஸ்தான், தென் ஆப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

இன்று நடைபெற்ற வங்காளதேசத்திற்கு எதிரான ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் சார்பில் ரஷித் கான் மற்றும் நவீன் உல் ஹக் ஆகியோர் தலா 4 விக்கெட் வீழ்த்தினர். ரஷித் கான் 4 ஓவரில் 23 ரன்கள் கொடுத்து 4 விக்கெட் வீழ்த்தினார்.

இந்நிலையில், சர்வதேச டி20 போட்டிகளில் அதிக முறை 4 விக்கெட் வீழ்த்தியவர் என்ற சாதனையை ரஷித் கான் நிகழ்த்தி உள்ளார். சர்வதேச டி20 போட்டிகளில் ரஷித் கான் இதுவரை 9 முறை 4 விக்கெட் வீழ்த்தி உள்ளார். இந்தப் பட்டியலில் வங்காளதேசத்தின் ஷகிப் அல் ஹசன் 2வது இடத்திலும் (8 முறை), உகாண்டா வீரர் ஹென்றி சென்யாண்டோ 3வது இடத்திலும் (7 முறை) உள்ளனர்.

## இவருக்காக டி20 உலகக்கோப்பையை இந்தியா வெல்ல வேண்டும் சேவாக்



டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இந்தியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்த தொடரில் இந்திய அணி சூப்பர் 8 சுற்றின் தனது கடைசி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சந்தித்தது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய கேப்டன் மிட்செல் மார்ஷ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்தியா 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 205 ரன்கள் குவித்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 7 பவுண்டரிகள், 8 சிக்சர்களுடன் 92 ரன்கள் குவித்தார்.

பின்னர் 206 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்கு 181 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் இந்தியா 24 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தனது பிரிவில் இந்தியா 6 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து அரையிறுதிக்குள் முன்னேறி அசத்தியுள்ளது. இந்திய தரப்பில் அர்ஷ்தீப்சிங் 3 விக்கெட்டுகளும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இந்நிலையில் நடப்பு டி20 உலகக்கோப்பை தொடரை இந்திய அணி ராகுல் டிராவிட்டுக்காக வெல்ல வேண்டும் என இந்திய முன்னாள் வீரர் சேவாக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்த உலகக் கோப்பையில் இதைவிட சிறந்த பொழுதுபோக்கான ஆட்டத்தை நான் பார்க்கவில்லை. முதல் ஆறு ஓவர்கள் மட்டுமே ரோகித் சர்மா கிரீசில் இருப்பார் என்று நான் நினைத்தேன்.

ஆனால் பவர் பிளேவுக்கு பிறகும் அவர் விளையாடினார். மேலும் அவர் என்ன செய்தார் என்று பாருங்கள். அவர் நம் இதயங்களை மகிழ்ச்சியடைய வைத்தார். வேறென்ன செய்ய வேண்டும். 2011ம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பையை சச்சினுக்காக நாம் விளையாடினோம். இந்த முறை ராகுல் டிராவிட்டுக்காக டி20 உலகக்கோப்பையை வெல்ல வேண்டும். அவர் இதுவரையில் உலக கோப்பையை வென்ற அணியில் இருந்ததில்லை. இந்த முறை இந்தியா உலகக் கோப்பையை வென்றால் ஒரு பயிற்சியாளராக அவர் உலகக் கோப்பையை வென்ற அணியில் இருப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒரு டி20 உலகக் கோப்பையில் அதிக விக்கெட்டுகள் சாதனை படைத்த அர்ஷ்தீப் சிங்



டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டீசில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இந்தியா, ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்த தொடரில் இந்திய அணி சூப்பர் 8 சுற்றின் தனது கடைசி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சந்தித்தது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய கேப்டன் மிட்செல் மார்ஷ் முதலில் பந்து வீசுவதாக அறிவித்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்தியா 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 205 ரன்கள் குவித்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ரோகித் சர்மா 7 பவுண்டரிகள், 8 சிக்சர்களுடன் 92 ரன்கள் குவித்தார்.

பின்னர் 206 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்கு 181 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் இந்தியா 24 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தனது பிரிவில் இந்தியா 6 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து அரையிறுதிக்குள் முன்னேறி அசத்தியுள்ளது. இந்திய தரப்பில் அர்ஷ்தீப்சிங் 3 விக்கெட்டுகளும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

அர்ஷ்தீப் சிங் நடப்பு டி20 உலகக்கோப்பை தொடரில் இதுவரை 6 ஆட்டங்களில் ஆடி 15★ விக்கெட்டுகள் வீழ்த்தி உள்ளார். இதன் மூலம் அவர் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார். அதாவது, ஒரு டி20 உலகக்கோப்பை தொடரில் அதிக விக்கெட்டுகள் எடுத்த இந்திய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதற்கு முன் கடந்த 2007 டி20 உலகக் கோப்பையில் ஆர்.பி. சிங் 12 விக்கெட்டுகள் எடுத்ததே முந்தைய சாதனையாகும். அந்தப் பட்டியலில் தற்போது 3வது இடத்தில் 2014ல் 11 விக்கெட்டுகள் எடுத்த ரவிச்சந்திரன் அஸ்வினும் மற்றும் 2024ல் 11★ விக்கெட்டுகள் எடுத்துள்ள ஜஸ்ப்ரித் பும்ராவும் உள்ளனர்.

## தேசிய தடகள போட்டிக்கான தமிழக அணி அறிவிப்பு



மாநிலங்களுக்கு இடையிலான 63வது தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி அரியானாவில் வருகிற 27ந் தேதி முதல் 30ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டியில் பங்கேற்கும் தமிழக தடகள அணியை, தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் சி. லதா அறிவித்துள்ளார்.

தமிழக ஆண்கள் அணியில் சாய் சித்தார்த், அருண் குமார், ராகுல் குமார், நிதின், விஷால், ஆரோக்ய ராஜீவ், சந்தோஷ், ஆகாஷ் பாபு, வாசன், சரண் சங்கர், ஜெபக்குமார், தனுஷ் ஆதித்தன், மகேந்திரன், அரவிந்த், சுவாமிநாதன், பாரதி, முகமது சலாலுதீன், பிரவீன் சித்ரவேல், கவுதம், ஸ்ரீகுமரன் உள்பட 35 வீரர்களும், பெண்கள் அணியில் கிரிதரணி, பவித்ரா, நாதலியா இவாஞ்சலின், சுபா, வித்யா, புனிதா, கவிதா, லாவண்யா, இளவரசி, நித்யா, நந்தினி, ஷெரின், ஐஸ்வர்யா, பரனிகா, பவித்ரா, கிரிஷ்ணா ஜெயசங்கர், ஹேமமாலினி, தீபிகா, ஒலிம்பா ஸ்டெபி, ரோசி, கவுசல்யா உள்பட 30 வீராங்கனைகளும் இடம் பெற்றுள்ளனர்.



அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை

விளக்கம்:
ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல் பாரத்தை, இவனையும் சுமப்பதே எனக்கு அறம் என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.